தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

திருவள்ளுவர் ஆண்டு 2039, சித்திரை 24

2008 மே 6, செவ்வாய்க்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்:

"தொட்டனைத் தூறு மணற்கேணி மாந்தர்க்குக்
கற்றனைத் தூறும் அறிவு"

தோண்டத் தோண்ட ஊற்றுநீர் கிடைப்பது போல தொடர்ந்து படிக்கப் படிக்க அறிவு பெருகிக் கொண்டே இருக்கும்.

1. வினாக்கள்–விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள். வினா எண் 201, மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

201—

வாக்குச் சாவடி

***32429—திரு. இ. மகேந்திரன்:**

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி, உ. வாடிப்பட்டியில் வாக்குச் சாவடி அமைக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

[2008 மே 6

தேர்தல் ஆணையத்தின் தற்போதைய நெறிமுறைகளின்படி 1,400 வாக்காளர்களுக்கு ஒரு வாக்குச் சாவடி என்ற விகிதத்திலும் பொதுவாக ஒரு வாக்காளர் வாக்களிப்பதற்காக இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குமேல் செல்ல வேண்டியிராதவாறும் வாக்குச் சாவடிகள் அமைக்கப்படுகின்றன. உ. வாடிப்பட்டி கிராமத்தில் 304 வாக்காளர்கள் மட்டுமே உள்ளதாலும், அவர்கள் தற்போது வாக்களிக்கும் வாக்குச் சாவடி இரண்டு கிலோ மீட்டர் தூரத்திற்குள்ளேயே அமைந்துள்ளதாலும் அக்கிராமத்திற்கென தனியாக வாக்குச் சாவடி அமைக்க தேர்தல் ஆணையத்தின் தற்போதைய நெறிமுறைகளின்படி வாய்ப்பில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.

திரு. இ. மகேந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உசிலம்பட்டி தொகுதி, உத்தப்பநாயக்கனூர் ஊராட்சி, உ. வாடிப்பட்டி கிராமத்தில் சுமார் 500 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அங்கிருந்து சுமார் 2-1/2 கிலோ மீட்டர் தூரம் உள்ள உத்தப்பநாயக்கனூர் வந்து அவர்கள் வாக்களிக்க வேண்டிய நிலைமை இருக்கிறது. அங்கு ஒவ்வொரு தேர்தல் நேரத்திலும் வாக்காளர்கள் அதிகமாக வந்து வாக்களிப்பது இல்லை. 2-1/2 கிலோ மீட்டர் தூரத்திற்கு பஸ் வசதியும் இல்லாத காரணத்தால் அங்கு தனியாக ஒரு வாக்குச் சாவடி அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அண்மையிலே சட்டமன்ற, நாடாளுமன்ற தொகுதிகளை மறு வரையறை செய்து வெளியிடப்பட்ட ஆணைக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் அவர்கள் ஒப்புதல் வழங்கிவிட்டார்கள். புதிய சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஏற்ப வாக்காளர் பட்டியல் பாகங்களை மாற்றி அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாக வாக்குச் சாவடிகளை மறு சீரமைக்கும் பணியையும் மேற்கொள்ள இந்தியத் தேர்தல் ஆணையம் ஆணையிடும். அந்தச் சமயம் இந்தியத் தேர்தல் ஆணையம் வகுத்தளிக்கும் வரையறைகளுக்கு உட்பட்டு வாக்குச் சாவடிகள் அமைத்தல் தொடர்பான கோரிக்கைகள் மாவட்ட ஆட்சித் தலைவர்மூலமாக அந்தப் பகுதியிலே பரிசீலிக்கப்படும்.

2008 மே 6]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. மகேந்திரன்.*

திரு. இ. மகேந்திரன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதேபோல், உசிலம்பட்டி தொகுதி, செல்லம்பட்டி ஊராட்சி ஒன்றியம், எருவார்பட்டி பஞ்சாயத்து, கவுல்பட்டி கிராமத்தில் சுமார் 500 வாக்காளர்கள் இருக்கிறார்கள். அவர்கள் எருவார்பட்டி பஞ்சாயத்திற்கு வந்து வாக்களிக்க வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. அங்கு இரண்டு பிரிவினருக்கிடையே ஒவ்வொரு தேர்தல் சமயத்திலும் தகராறு ஏற்பட்டு வாக்களிக்க முடியாத நிலைமை அந்த கவுல்பட்டி மக்களுக்கு ஏற்படுகிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே இந்த அவையில் தொகுதி மறு சீரமைப்பு முடிந்தவுடன் கவுல்பட்டிக்கு தனியாக ஒரு வாக்குச் சாவடி அமைத்துத் தருகிறேன் என்று உத்தரவாதம் அளித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே, தொகுதி மறு சீரமைப்பு முடியும் தருவாயில் உள்ள இந்தச் சமயத்தில் அந்த கவுல்பட்டி கிராமத்திற்கு தனியாக ஒரு வாக்குச் சாவடியை அமைத்துத் தர முன்வருவார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேர்தல் ஆணையம் தனி உரிமை உள்ளது. தேர்தல் ஆணையத்தினுடைய நடவடிக்கைகளில் அரசு தலையிட முடியாது. அதேநேரத்தில் அரசாங்கத்திலே உள்ள மாவட்ட ஆட்சித் தலைவர்கள் போன்றவர்கள்தான் தேர்தல் ஆணையத்தினுடைய விதிமுறைகளுக்கு ஏற்ப ஒவ்வொரு தொகுதியிலும் வாக்குச் சாவடிகளை உறுதிப்படுத்துகிறார்கள். எனவே, தேர்தலுக்காக வாக்குச் சாவடிகளை அமைக்கின்ற அந்தக் காலகட்டத்தில் அதற்குரிய அதிகாரிகள்மூலமாக தகுந்த பரிகாரத்தை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேடிக்கொள்ள முயற்சிக்கலாம்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ல. ராதாகிருஷ்ணன்.*

முற்பகல் 9-35

திரு. ல. ராதாகிருஷ்ணன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தொகுதி மறு வரையறை செய்யப்படும்பொழுது, கோவில்பட்டி தொகுதிக்கு உட்பட்ட நெல்லை மாவட்டத்தில்*

இருக்கின்ற வருவாய் கிராமங்கள் அன்று சேர்க்கப்படவில்லை. இப்பொழுது 12 வருவாய் கிராமங்கள் தூத்துக்குடி மாவட்டத்தோடு இணைக்கப்பட்டுள்ளன. ஆனால், வாக்களிக்கின்ற வாக்காளர்கள் சங்கரன்கோயில் தொகுதியில், நெல்லை மாவட்டத்தில் வாக்களிக்கின்ற ஒரு வாய்ப்பைப் பெற்றுள்ளார்கள். அவற்றை அரசு மறுபரிசீலனை செய்து, தேர்தல் ஆணையத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்று, தூத்துக்குடி மாவட்டத்தோடு கோவில்பட்டி தொகுதியில் அந்த 12 வருவாய் கிராமங்கள் சேர்க்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் கேட்டு அமர்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கேள்விக்கு நான் விடையளிப்பது முறையாகாது. ஏனென்றால், இந்தப் பிரச்சினை, தேர்தல் ஆணையம் நேரடியாகப் பரிசீலித்திட வேண்டியதாகும். எந்த ஒரு தொகுதியிலும் இடம்பெறாமல் எந்த கிராமமும் இருக்க முடியாது. ஏதாவது ஒரு தொகுதியிலே அது இடம் பெற்றே தீரவேண்டும். அப்படி இடம் பெறாமல் இருக்குமானால் அந்தப் பிரச்சினையைத் தேர்தலுக்காக தொகுதிகள் பிரித்து அறிவித்ததற்குப் பின்னர், வாக்குச் சாவடிகளை மாவட்ட ஆட்சித் தலைவரோ, தேர்தலுக்காக மாவட்ட அளவில் நியமிக்கப்படுகிற அதிகாரிகளோ அதை ஆய்வு செய்கிறபொழுது, அந்தக் காலகட்டத்தில் கிராமங்கள் ஏதேனும் விடுபட்டு இருக்குமானால், தேர்தல் ஆணையம் உடனடியாக அதற்குரிய பரிகாரத்தைச் செய்யும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 202, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

202—

விதை சுத்திகரிப்பு நிலையம்

***43012—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப்பட்டு தொகுதியில் விதை சுத்திகரிப்பு நிலையம் புதியதாக அமைக்க அரசு ஆவன செய்யுமா?